**03.02.2026**

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண். 286/2025

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சபரிநாதன் | | |
| த/பெ | அன்பரசன் | | |
| கிராமம் | ஆமணக்கப்பட்டி | தொழில் | |
| தாலுக்கா | போச்சம்பள்ளி | வயது | 33 /2026 |
| மாவட்டம் | கிருஷ்ணகிரி | தேதி | 03.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் டிரைவர் தொழில் செய்து வருகிறேன். சுமார் 9 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மத்தூரிலிருந்து நானும் என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த குட்டி மகன் மணி என்பவரும் விழுப்புரத்திற்கு டாடா ஏசி வாகனத்தில் தக்காளி லோடு ஏற்றி வந்தேன். ரொம்ப நாட்கள் ஆனதால் அந்த டாடா ஏசி வாகணம் எனக்கு நினைவில் இல்லை. அன்று இரவு சுமார் 10.00 மணி அளவில் விழுப்புரம் புதிய பேருந்து அருகில் சுமார் 10, 15 நபர்கள் என் வாகனத்தை நிறுத்த சொன்னார்கள். சொல்லிவிட்டு, KA பதிவைப் பார்த்துவிட்டு பெங்களுர் வண்டியா நிறுத்து என்றார்கள். நான் நிறுத்தினேன். அந்த நபர்கள் கல் மற்றும் சில பொருட்களால் என் டாடா ஏசி வாகனத்தின் முன்பக்க கண்ணாடியை அடித்து உடைத்து சேதப்படுத்தினார்கள். அந்த கண்ணாடிகளின்

மதிப்பு சுமார் 13,000/- இருக்கும். என் வாகனத்தை சேதப்படுத்திய நபர்களை பார்த்தால் என்னால் அடையாளம் கூற முடியாது. அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. உடனே, விழுப்புரம் போலீசார் வந்து என்னுடைய டாடா ஏசி வாகனத்தை காவல் நிலையம் எடுத்து வர சொன்னார்கள். நான் காவல் நிலையம் எடுத்து சென்று விட்டேன். விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையம் என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். நான் எந்த புகாரும் கைப்பட எழுதி கொடுக்கவில்லை. புகாரில் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா. 1 ஆகும். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். நான் அப்போது வாகனத்தின் கண்ணாடியை கல்லால் தாக்கி உடைத்த நபர்களின் பெயர்கள் நான் எங்கும் தெரிவிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 12.09.2016 – தேதி இரவு 10.00 மணியளவில் பதிவு எண் KA-43-4308 கொண்ட டாடா ஏசி வாகனத்தில் விழுப்புரம் புதிய பேருந்து அருகில் 60 பெட்டிகளில் தக்காளிகளை ஏற்றிக்கொண்டு வந்தபோது விழுப்புரம் கலெக்டர் ஆபிஸ் அருகில் உள்ள மெயின் ரோட்டில் எனக்கு தெரிந்த விழுப்புரம் பூந்தோட்டத்தைச் சேர்ந்த வெங்கட் , சூர்யா மற்றும் அடையாளம் தெரிந்த 10 நபர்கள் தடி, கல் ஆகியவற்றுடன் வழி மறித்தார்கள் என்றும், நாங்கள் இருவரும் கீழே இறங்கிவிட்டோம் என்றும், அப்போது அந்த நபர்கள் கர்நாடாகாவில் தமிழர்களை வாழவிடாமல் செய்கிறார்கள் என்றும், கர்நாடகா பதிவு எண் கொண்ட வாகனங்களை தமிழ்நாட்டில்

விடமாட்டோம் என்று கோஷம் போட்டுக்கொண்டு அவர்கள் கைகளில் வைத்திருந்த தடி, கல்லால்அடித்து எனது வாகனத்தின் கண்ணாடியை சேதப்படுத்தினார்கள் என்றும், கும்பல் கூடவே அந்த நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும், பின்பு நான் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையம் வாகனத்துடன் சென்று, எழுத்து மூலமான புகார் ஒன்றை கொடுத்துக்கொண்டேன் என்றும், 13.09.2016- தேதியில் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் அன்று இரவு விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரணை செய்த போது தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன்.

**மறுவிசாரணை**

இல்லை